**சாராம்சம்:** இனிய குழந்தைகளே, இந்த எல்லையற்ற நாடகத்தை உங்களுடைய உணர்வில் சதா வைத்திருப்பதன் மூலம், நீங்கள் எல்லையற்ற சந்தோஷத்தைக் கொண்டிருப்பீர்கள். மிக விசேடமான குழந்தைளாகிய, நல்ல முயற்சியாளர்களே அதிகளவு பூஜிக்கப்படுகிறார்கள்.

**கேள்வி:** எந்த உணர்வு உங்களை இந்த உலகின் சகல வகையான துன்பங்களில் இருந்தும் விடுவிக்கிறது? முகமலர்ச்சியுடன் இருப்பதற்கான வழி என்ன?

**பதில்:** நீங்கள் இப்போது எதிர்காலப் புதிய உலகிற்குச் செல்கிறீர்கள் என்ற உணர்வில் எப்போதும் இருங்கள். எதிர்கால சந்தோஷத்தைப் பேணுங்கள், நீங்கள் உங்களுடைய துன்பம் அனைத்தையும் மறந்துவிடுவீர்கள். இந்தத் தடைகள் நிறைந்த உலகில் தடைகளே இருக்கும். ஆனால், நீங்கள் இந்த உலகில் இன்னும் சில நாட்கள் மாத்திரமே இருப்பீர்கள் என அறியும்பொழுது, நீங்கள் முகமலர்ச்சியாக இருப்பீர்கள்.

**பாடல்:** விழித்தெழுங்கள்! ஓ மணவாட்டிகளே, விழித்தெழுங்கள்! புதிய நாள் உதயமாகப் போகிறது….

ஓம்சாந்தி. இந்தப் பாடல் மிக நல்லது. நீங்கள் இந்தப் பாடலைச் செவிமடுக்கும்போது, 84 பிறவிகள் அனைத்தினதும் இரகசியங்கள் மிகவும் ஆரம்பத்தில் இருந்து உங்கள் புத்தியில் வருகின்றன. நீங்கள் மேலிருந்து கீழே இங்கு வரும்போது, நீங்கள் சூட்சும வதனத்தினூடாக வருவதில்லை எனக் குழந்தைகளாகிய உங்களுக்கு விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நீங்கள் இப்போது சூட்சும வதனத்தினூடாகவே அங்கு திரும்பிச் செல்ல வேண்டும். இந்த வேளையில் மாத்திரமே பாபா உங்களுக்குச் சூட்சும வதனத்தைக் காட்டுகிறார். இந்த ஞானத்திற்குரிய விடயங்கள் சத்திய, திரேதா யுகங்களில் அறியப்படுவதில்லை, இந்தப் படங்கள் எதுவும் அங்கு இருப்பதுமில்லை. பக்தி மார்க்கத்தில் பல படங்கள் காணப்படுகின்றன. தேவர்கள் போன்றோரும் அதிகளவில் பூஜிக்கப்படுகிறார்கள். துர்க்கை, காளி, சரஸ்வதி அனைவரும் உண்மையில் ஒருவரே. ஆனால் அவருக்குப் பல்வேறுபட்ட பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. மிக விசேடமான குழந்தைகளான, நல்ல முயற்சியாளர்களே, அதிகளவில் பூஜிக்கப்படுவார்கள். நீங்கள், பூஜிக்கத் தகுதிவாய்ந்தவர்களிலிருந்து பூஜிப்பவர்கள் ஆகி, பாபாவையும் உங்களையும் பூஜிக்க ஆரம்பித்தீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இவர் (பிரம்ம பாபா) நாராயணனைப் பூஜித்து வந்தார். இது ஓர் அற்புதமான நாடகமாகும். எவ்வாறு ஒரு நாடகத்தைப் பார்க்கும்போது சந்தோஷம் ஏற்படுகிறதோ, அவ்வாறே, இதுவும் ஓர் எல்லையற்ற நாடகமாகும். எவருக்கும் இதனைப் பற்றித் தெரியாது. இப்போது உங்கள் புத்தியில் நாடகத்தின் இரகசியங்கள் அனைத்தும் உள்ளன. இந்த உலகில் அதிகளவில் துன்பம் நிலவுகிறது. நீங்கள் இங்கு மேலும் சில நாட்கள் மாத்திரமே தங்கியிருந்து, பின்னர் புதிய உலகிற்குச் செல்வீர்கள் என நீங்கள் அறிவீர்கள். நீங்கள் எதிர்காலத்திற்கான சந்தோஷத்தைப் பேணும்போது, நிகழ்காலத்தின் துன்பம் அகற்றப்படுகின்றது. ‘பாபா, பல தடைகள் ஏற்படுவதால், நாங்கள் இழப்பினை அனுபவம் செய்கிறோம்’ எனப் பலரும் எழுதுகிறார்கள். தந்தை கூறுகிறார்: எந்தவிதத் தடைகள் உங்கள் முன் வந்தாலும், நீங்கள் இன்று மில்லியன்களை உடையவராக இருந்து நாளை கடனாளியாகினாலும், நீங்கள் எதிர்கால சந்தோஷத்தில் நிலைத்திருக்க வேண்டும். இது இராவணனின் அசுர உலகமாகும். நீங்கள் நடக்கும் போதும், உலாவித் திரியும்போதும் ஏதாவதொரு தடை வரும். இந்த உலகிற்கு இன்னும் சில நாட்களே எஞ்சியுள்ளன. பின்னர் நாங்கள் எல்லையற்ற சந்தோஷ உலகிற்குச் செல்வோம். பாபா கூறுகிறார்: நேற்று, நாங்கள் அவலட்சணமானவர்களாக இருந்தோம், நாங்கள் கிராமத்துச் சிறுவர்களாக இருந்தோம். தந்தை இப்போது எங்களுக்கு ஞானத்தைக் கொடுத்து எங்களை அழகானவர்கள் ஆக்குகிறார். தந்தையே விதையானவரும், சத்தியமும், உயிருள்ளவரும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் பரமாத்மா என அழைக்கப்படுகிறார். அவர் அனைத்திலும் அதியுயர்ந்த வசிப்பிடத்தில் வசிக்கிறார். அவர் மறுபிறவிச் சக்கரத்தினுள் பிரவேசிப்பதில்லை. நாங்கள் அனைவரும் மறுபிறவிச் சக்கரத்தினுள் பிரவேசிக்கிறோம், ஆனால் அவர் அவ்வாறு வராமல் இருக்கிறார். அவர் சக்கரத்தின் இறுதியில் வந்து அனைவருக்கும் சற்கதி அருள வேண்டும். பக்தி மார்க்கத்தில், பிறவிபிறவியாக, நீங்கள் பாடி வருகிறீர்கள்: பாபா, நீங்கள் வரும்போது, நாங்கள் உங்களுக்கு உரியவர்கள் ஆகுவோம். என்னுடையவர் பாபா ஒருவரே அன்றி, வேறொருவருமல்ல.

நாங்கள் பாபாவுடன் மாத்திரமே செல்வோம். இது துன்ப உலகமாகும். பாரதம் மிக ஏழையாக உள்ளது! தந்தை கூறுகிறார்: நான் பாரதத்தைச் செல்வம் மிக்கதாக்கினேன், இராவணன் அதனை நரகமாக்கிவிட்டான். குழந்தைகளாகிய நீங்கள் இப்போது தந்தையின் முன்னால் நேரடியாக அமர்ந்துள்ளீர்கள். பலர் வீட்டில் தங்கள் குடும்பங்களுடன் வசிக்கிறார்கள். அனைவராலும் இங்கு அமர்ந்திருக்க முடியாது. வீட்டில் உங்கள் குடும்பங்களுடன் வாழுங்கள். நீங்கள் நிற ஆடைகளை அணியலாம். நீங்கள் வெள்ளை ஆடைகளை அணிய வேண்டும் என்று யார் கூறியது? பாபா ஒருபோதும் இதனை எவருக்கும் கூறவில்லை. நீங்கள் நிற ஆடைகளை விரும்பாததாலேயே, வெள்ளை ஆடைகளை அணிகிறீர்கள். இங்கு வசிக்கும்போது நீங்கள் வெள்ளை ஆடைகளை அணிந்தாலும், நிற ஆடைகளை அணிபவர்களால், அந்த ஆடையுடன் பலருக்கு நன்மையை ஏற்படுத்தமுடியும். பெண்கள் தங்கள் கணவன்மாருக்கு விளங்கப்படுத்த முயற்சிக்கிறார்கள்: கடவுள் எங்களைத் தூய்மையானவர்கள் ஆகும்படி கூறுகிறார். தேவர்கள் தூய்மையானவர்களாக இருந்ததாலேயே, அவர்களின் விக்கிரகங்களுக்கு முன்னால் மக்கள் தலைவணங்குகிறார்கள். தூய்மையாகுவது மிகவும் நல்லது. இது இப்போது உலக இறுதி என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்தப் பணம் அனைத்தையும் வைத்திருந்து நீங்கள் என்ன செய்வீர்கள்? அதிகளவில் கொள்ளை இடம்பெறுகிறது! அதிகளவில் இலஞ்சம் கொடுப்பது இடம்பெறுகிறது! ‘சிலரின் செல்வம் புதைக்கப்பட்டுவிடும், சிலரின் செல்வம் களவாடப்பட்டுவிடும், ஆனால், கடவுளின் பெயரில் அதனை உபயோகிப்பவர்களின் செல்வம் மாத்திரமே பயனுள்ள முறையில் உபயோகிக்கப்படும்’ என்ற கூற்று இந்த நேரத்திற்கே பொருந்துகிறது. கடவுள் இப்போது உங்கள் முன்னால் பிரசன்னமாக உள்ளார். விவேகமான குழந்தைகள் அனைத்தையும் கடவுளின் பெயரில் கொடுத்து அதனைப் பயனுள்ள முறையில் உபயோகிக்கிறார்கள். மனிதர்கள் தூய்மையற்ற மனிதர்களுக்கே தானம் செய்கிறார்கள். இங்கு, தூய, புண்ணியாத்மாக்களிடம் இருந்து தானங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பிராமணர்களைத் தவிர வேறு எவருடனும் உங்களுக்குத் தொடர்பு கிடையாது. நீங்கள் தூய, புண்ணியாத்மாக்கள்.;; நீங்கள் தூய, புண்ணியச் செயல்களை மாத்திரமே செய்கிறீர்கள். இங்கு கட்டப்பட்டுள்ள இந்தக் கட்டடங்களில் நீங்கள் மாத்திரமே தங்குகிறீர்கள். பாவத்தைப் பற்றிய கேள்விக்கு இடமேயில்லை. உங்களிடம் உள்ள பணத்தை, நீங்கள் பாரதத்தைச் சுவர்க்கமாக்குவதற்காக உபயோகிக்கிறீர்கள். உங்களிற் சிலர் உண்ணாமலே இருந்து, கூறுகிறீர்கள்: பாபா, எனது பெயரில் இந்தக் கட்டடத்திற்கு ஒரு செங்கல்லை இடுங்கள், அதனால், அதன்பலனாக என்னால் ஒரு மாளிகையைப் பெற முடியும். அத்தகைய குழந்தைகள் மிகவும் விவேகிகள்! நீங்கள் கற்களுக்குப் பதிலாக தங்கத்தைப் பெற்றுக் கொள்கிறீர்;கள். மிகக் குறுகிய காலமே எஞ்சியுள்ளது. நீங்கள் அதிகளவு சேவை செய்கிறீர்கள்! விழாக்களும், கண்காட்சிகளும் தொடர்ந்தும் அதிகரிக்கின்றன. புதல்விகளான நீங்கள் அதி திறமைசாலிகள் ஆகவேண்டும். உங்களிற் சிலர் தந்தைக்குரியவர்கள் ஆகுவதில்லை; நீங்கள் உங்கள் பற்றை விட்டுவிடுவதில்லை. தந்தை கூறுகிறார்: நான் உங்களைச் சுவர்க்கத்திற்கு அனுப்பினேன். நான் இப்போது உங்களை மீண்டும் சுவர்க்கத்திற்குச் செல்வதற்கு தயார்ப்படுத்துகிறேன். நீங்கள் ஸ்ரீமத்தைப் பின்பற்றினால், உயர்ந்த அந்தஸ்தைக் கோருவீர்கள். வேறு எவராலும் இந்த விடயங்களைக் கூற முடியாது. உங்கள் புத்தியில் முழு உலகச் சக்கரமும், அசரீரி உலகமும், சூட்சும உலகமும் உள்ளன. தந்தை கூறுகிறார்: குழந்தைகளே, சுயதரிசனச் சக்கரதாரிகள் ஆகித் தொடர்ந்தும் மற்றவர்களுக்கும் விளங்கப்படுத்துங்கள். இது எத்தகைய வியாபாரம் எனப் பாருங்கள்! நீங்களே சுவர்க்கத்தின் செல்வந்த அதிபதிகள் ஆகுகிறீர்கள், எனவே, நீங்கள் மற்றவர்களையும் இவ்வாறு ஆக்க வேண்டும். எவ்வாறு நீங்கள் மற்றவர்களுக்குப் பாதையைக் காட்ட முடியும் என்பதே உங்கள் புத்தியில் நிலைத்திருக்க வேண்டிய ஒரேயொரு விடயம் ஆகும். நாடகத்திற்கேற்ப, கடந்து சென்ற எதுவும் நாடகமே ஆகும். விநாடிக்கு விநாடி என்ன நிகழ்ந்தாலும், நாங்கள் அதனைப் பற்றற்ற பார்வையாளர்களாக அவதானிக்கிறோம். தெய்வீகத் திருஷ்டியினூடாகத் தந்தை குழந்தைகளாகிய உங்களுக்குக் காட்சிகளை அருளுகிறார். நீங்கள் முன்னேறுகையில், பல காட்சிகளைக் காண்பீர்கள். மக்கள் விரக்தியில் கதறி அழுவார்கள். ஆனால், நீங்களோ சந்தோஷத்தில் கைதட்டுவீர்கள். நாங்கள் மனிதர்களில் இருந்து தேவர்களாக மாறுகிறோம், எனவே, ஒரு புதிய உலகம் நிச்சயமாக எங்களுக்குத் தேவையாக உள்ளது. இதற்காகவே விநாசமும் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது நல்ல விடயமாகும். தங்கள் மத்தியில் சண்டையிடக்கூடாது, அமைதி நிலவவேண்டும் என மக்கள் நம்பினாலும், அச் சண்டை அனைத்தும் நாடகத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

இரண்டு குரங்குகள் ஒன்றோடு ஒன்று சண்டையிட, மூன்றாவது அவற்றிற்கிடையே உள்ள வெண்ணெயை எடுத்துக் கொள்கிறது. எனவே, தந்தை இப்போது கூறுகிறார்: தந்தையாகிய என்னை நினைவு செய்து, அனைவருக்கும் இந்தப் பாதையைக் காட்டுங்கள். எளிமையாக வாழ்ந்து, எளிமையான உணவினை உண்ணுங்கள். சிலவேளைகளில், உங்களுக்கு மிக நல்ல விருந்தோம்பல்; செய்யப்படுகிறது. நீங்கள் உண்கின்ற பொக்கிஷக் களஞ்சியத்தைப் பற்றிக் கூறுகிறீர்கள்: 'பாபா, இவை அனைத்தும் உங்களுடையவையே'. தந்தை கூறுகிறார்: அதனை நம்பிக்கைப் பொறுப்பாளராக பராமரியுங்கள்! 'பாபா, இவை அனைத்தும் உங்களால் கொடுக்கப்பட்டது'. பக்தி மார்க்கத்தில், இது கூற வேண்டும் என்பதற்கே கூறப்பட்டது. இப்போது, நான் உங்களை நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் ஆகும்படி கூறுகிறேன். நான் இப்போது நேரடியாக உங்களின் முன்னால் இருக்கிறேன். நானும் நம்பிக்கைப் பொறுப்பாளராகி, அதன் பலனாக, உங்களையும் நான் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக ஆக்குகிறேன். நீங்கள் எதனையும் செய்வதற்கு முன்னர், முதலில், கேளுங்கள். பாபா தொடர்ந்தும் அனைத்து விடயங்களைப் பற்றியும் அறிவுரை கூறுகிறார். 'பாபா, நான் வீடு கட்டலாமா? நான் இதனைச் செய்யலாமா?' பாபா கூறுகிறார்: ஆமாம், நீங்கள் செய்யலாம். ஆனால், நீங்கள் எதனையும் பாவாத்மாக்களுக்குக் கொடுக்கக்கூடாது. உங்கள் புதல்வி ஞானப் பாதையைப் பின்பற்றாமல் திருமணம் செய்ய விரும்பினால், என்ன செய்ய முடியும்? தந்தை வினவுகிறார்: நீங்கள் ஏன் தூய்மையற்றவர்கள் ஆகுவதற்கு விரும்புகிறீர்கள்? எவ்வாறாயினும், அது அவர்களின் பாக்கியத்தில் இல்லாவிடின், அவர்கள் தூய்மையற்றவர்கள் ஆகுகிறார்கள். பல்வேறு நிலைமைகள் காணப்படுகின்றன. ஒருவர் தூய்மையாக இருந்தாலும், மாயை அந்த ஆத்மாவை அறைவதனால், அவர் தூயவர் ஆகிவிடுகிறார். மாயை மிகவும் சக்திசாலி. யாராவதொருவர் காமத்தின் ஆதிக்கத்தின் கீழ் வரும்போது, அது நாடகத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ளது என்றே கூறப்பட வேண்டும். இப்பொழுது வரை நடைபெற்றவை எதுவும் ஒரு கல்பத்திற்கு முன்னரும் நிகழ்ந்தவையே ஆகும். அது எதுவும் புதியதல்ல! நாங்கள் இந்த நல்ல பணியைச் செய்யும்போது பலர் தடைகளை உருவாக்குகிறார்கள். இது எதுவும் புதியதல்ல! எங்கள் சரீரங்கள், மனங்கள், செல்வம் மூலம் நாங்கள் நிச்சயமாகப் பாரதத்தைச் சுவர்க்கம் ஆக்க வேண்டும். நாங்கள் அனைத்தையும் தந்தைக்கு அர்ப்பணிப்போம். நீங்கள் ஸ்ரீமத்திற்கேற்ப ஆன்மீகமாகப் பாரதத்திற்குச் சேவை செய்கிறீர்கள் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். நீங்கள் மீண்டும் ஒருமுறை உங்களுடைய இராச்சியத்தை ஸ்தாபிக்கிறீர்கள் என்பது உங்கள் புத்தியில் உள்ளது. தந்தை கூறுகிறார்: மக்கள் என்றும் ஆரோக்கியமானவர்களாகவும் செல்வந்தர்களாகவும் ஆகத் தக்க வகையில் மூன்று சதுர அடி நிலத்தில் ஆன்மீக வைத்தியசாலை இணைந்த பல்கலைக்கழகத்தைத் திறந்து வையுங்கள். எவ்வாறாயினும், எவரும் மூன்று சதுர அடி நிலத்தைக்கூட வழங்குவதில்லை! அவர்கள் கூறுகிறார்கள்: பிரம்மகுமாரிகள் உங்களுக்கு மந்திரவசியம் செய்து, உங்களைச் சகோதர, சகோதரி ஆக்கிவிடுவார்கள். இது நாடகத்தில் உங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள மிக நல்ல வழிமுறை ஆகும். ஒரு சகோதரரும் சகோதரியும் ஒருவருக்கொருவர் தூய பார்வையைக் கொண்டிருக்க முடியாது. இ;நநாட்களில்;, உலகில் பல தூய விடயங்கள் காணப்படுகின்றன, கேட்கவும் வேண்டாம்! தந்தை கருணைகொள்வது போலவே, குழந்தைகளாகிய நீங்களும் கருணை கொள்ள வேண்டும். எவ்வாறு தந்தை நரகத்தைச் சுவர்க்கமாக மாற்றுகிறாரோ, அவ்வாறே, கருணைநிறைந்த குழந்தைகளான நீங்களும் தந்தையின் உதவியாளர்கள் ஆகவேண்டும். உங்களிடம் செல்வம் இருந்தால், வைத்தியசாலை இணைந்த பல்கலைக்கழகத்தைத் திறவுங்கள். இதில் மேலதிகச் செலவு என்ற கேள்விக்கே இடமில்லை. இந்தப் படங்களை அங்கு வைத்திருங்கள். ஒரு கல்பத்தின் முன்னர் ஞானத்தைப் பெற்றவர்களின் புத்திகளின் பூட்டானது திறக்கும்; அவர்கள் தொடர்ந்தும் வருவார்கள். பல குழந்தைகள் கற்பதற்காகத் தொலைவில் இருந்து வருகிறார்கள். சில குழந்தைகள் தங்கள் கிராமத்தில் இருந்து இரவிலே புறப்பட்டு தங்கள் நிலையங்களைக் காலையில் சென்றடைவதை பாபா பார்த்துள்ளார். அவர்கள் தங்கள் புத்திகளை நிரப்பிக் கொண்டு வீடு திரும்புகிறார்கள். நீங்கள் செவிமடுக்கும் அனைத்தும் வெளியேறிவிடும் வகையில் உங்கள் எவரது புத்தியும் இருக்கக்கூடாது. நீங்கள் எந்த அந்தஸ்தைக் கோருவீர்கள்? உங்களுக்கு உங்கள் எல்லையற்ற ஆஸ்தியைக் கொடுப்பதற்காக எல்லையற்ற தந்தை கற்பிக்கின்றார் என்பதில் குழந்தைகளாகிய நீங்கள் அதிகளவு சந்தோஷத்தைக் கொண்டிருக்க வேண்டும். ஞானம் மிக இலகுவானது! முற்றிலும் கல்லுப்புத்தியைக் கொண்டவர்கள் தெய்வீகப் புத்தியுடையவர்களாக ஆக்கப்பட வேண்டும் என்பதை பாபா

புரிந்து கொள்கிறார். பாபாவிற்குப் பெருமளவு சந்தோஷம் உள்ளது. அது மறைமுகமானது. ஞானமும் மறைமுகமானது. மம்மாவும், பாபாவும் இலக்ஷ்மியும் நாராயணனும் ஆகுகிறார்கள். எனவே, நீங்கள் எவ்விதத்திலும் குறையலாமா? ''நானும் சேவை செய்வேன்''. ஆகவே நீங்கள் யோகசக்தியின் மூலம் உங்கள் இராச்சியத்தை ஸ்தாபிக்கின்ற போதையில் நிலைத்திருக்க வேண்டும். நீங்கள் இப்போது சுவர்க்க அதிபதிகள் ஆகுகிறீர்கள். இந்த ஞானம் அங்கு இருக்காது. இந்த ஞானம் தற்காலத்திற்கே உரியது. அச்சா.

இனிமையிலும் இனிமையான, அன்புக்குரிய, எப்போதோ தொலைந்து இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தாய், தந்தையாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும். ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

**தாரணைக்கான சாராம்சம்:**

1. விவேகிகளாகி, கடவுளின் பெயரில் அனைத்தையும் உபயோகிப்பதன் மூலம் அவற்றைப் பயனுள்ளதாக்குங்கள். தூய்மையற்றவர்களுக்குத் தானம் செய்யாதீர்கள். பிராமணர்களைத் தவிர வேறு எவருடனும் தொடர்பைக் கொண்டிராதீர்கள்.
2. ஞானம் வெளியேறுவதை அனுமதிக்கும் வகையில், உங்கள் புத்தியில் எந்தத் துவாரங்களும் இல்லாதிருப்பதை நிச்சயித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு எல்லையற்ற ஆஸ்தியைக் கொடுப்பதற்கு, உங்கள் எல்லையற்ற தந்தை உங்களுக்குக் கற்பிக்கின்றார். இந்த மறைமுகமான சந்தோஷத்தில் நிலைத்திருங்கள். தந்தையைப் போன்று கருணை நிறைந்தவர் ஆகுங்கள்.

**ஆசீர்வாதம்:** ஆர்வம் உற்சாகம் என்ற ஒத்துழைப்பைக் கொடுப்பதன் மூலம் அனைவரையும் சக்திசாலி ஆக்குகின்ற உண்மையான சேவகர் ஆகுவீர்களாக.

சேவகர் என்றால் அனைவருக்கும் ஊக்கம் உற்சாகம் என்ற ஒத்துழைப்பைக் கொடுத்து அவர்களைச் சக்திசாலிகள் ஆக்குவதாகும். இப்பொழுது சிறிதளவு நேரN;ம எஞ்சியுள்ளது. இங்கு கூடியளவு படைப்பு வரவுள்ளது. பலர் ஏற்கனவே வந்துவிட்டார்கள் என நினைத்துச் சந்தோஷமடையாதீர்கள். எண்ணிக்கை இப்பொழுது அதிகளவு அதிகரிக்க உள்ளது. எனவே இப்பொழுது நீங்கள் பெற்ற பராமரிப்பின் பிரதி உபகாரத்தைக் கொடுங்கள். வருகின்ற பலவீனமான ஆத்மாக்களுக்கு ஒத்துழைப்பைக் கொடுத்து அவர்களைச் சக்திசாலிகளாகவும், ஆட்ட அசைக்க முடியாதவர்களாகவும் ஆக்குங்கள். அப்பொழுதே நீங்கள் உண்மையான சேவகர்கள் என அழைக்கப்படுவீர்கள்.

**சுலோகம்:** ஆத்மாவாகிய உயிரை எப்பொழுது வேண்டுமானாலும் எவ்வாறு வே;ண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் நீங்கள் விரும்பியவாறு ஸ்திரப்;படுத்துங்கள். இதுவே ஆன்மீக அப்பியாசம் ஆகும்.

**---ஓம் சாந்தி---**

மாதேஸ்வரியிடமிருந்து பெறுமதிமிக்க மேன்மையான வாசகங்கள்.

1. கடவுள் குரு, ஆசிரியர், தந்தை என்ற வடிவில் பல்வேறு உறவுமுறைகளுக்கான ஆஸ்தியை வழங்குகிறார்.

பாருங்கள் கடவுள் மூன்று வடிவங்களை ஏற்று எங்களுக்கு ஆஸ்தியை வழங்குகிறார். அவர் எங்கள், தந்தை.ஆசிரியர் மற்றும் குருவும் ஆவார். தந்தையுடன் நாங்கள் ஒரு தந்தையின் உறவுமுறையைக் கொண்டிருக்கிறோம் ஆசிரியருடன் நாங்கள் ஒரு ஆசிரியரின் உறவுமுறையைக் கொண்டிருக்கிறோம். குருவிடம் ஒரு குருவின் உறவுமுறையைக் கொண்டிருக்கிறோம். தந்தையிடமிருந்து நீங்கள் விவாகரத்துச் செய்து கொண்டால் நீங்கள் எவ்வாறு ஆஸ்தியைப் பெறுவீர்கள்? நீங்கள் சித்தியடைந்து ஆசிரியரிடமிருந்து சான்றிதழைப் பெற்றுக் கொண்டாலே ஆசிரியரிடமிருந்து ஆதாரத்தைப் பெற்றுக் கொள்வீர்கள். நீங்கள் தந்தையின் விசுவாசமான, கீழ்ப்படிவான குழந்தையாக இருந்தாலும் அவரது

வழிகாட்டல்களைப் பின்பற்றவில்லையாயின் எதிர்காலத்திற்கான ஒரு வெகுமதியை நீங்கள் உருவாக்கமாட்டீர்கள். தந்தையிடமிருந்து முழுமையான சற்கதியையோ அல்லது தூய்மையின் ஆஸ்தியையோ உங்களால் கோரமுடியாது. தந்தையின் சத்தியமானது: நீங்கள் தீவிர முயற்சி செய்வீர்களாயின் நான் உங்களுக்கு 100 மடங்கு நன்மையைக் கொடுப்பேன். ஆனால் இது வெறும் கூற்று மாத்திரமல்ல. நீங்களும் ஓர் ஆழமான உறவுமுறையை அவருடன் வைத்திருக்க வேண்டும். அவர் அருச்சுனனுக்கும் ஒரு அறிவுறுத்தலைக் கொடுத்திருக்கிறார்: அனைவரையும் கொல்லுங்கள். சதா என்னை மாத்திரம் நினைவு செய்யுங்கள்.கடவுள் அனைத்து சக்திகளும் நிறைந்த ஒரேயொருவர், சர்வ சக்திவான்;, அனைத்து சக்திகளையும் கொண்டவர். எனவே அவர் நிச்சயமாகத் தனது சத்தியத்தை நிறைவேற்றுவார்.எவ்வாறாயினும் குழந்தைகளும், தந்தைக்கான தங்களது பொறுப்புகவள நிறைவேற்றும்போதே அது நிகழும். அதாவது தங்களது புத்தியின் யோகத்தை ஏனைய அனைவரிடமிருந்தும் துண்டித்து தங்களை ஒரேயொரு கடவுளுடன் இணைக்கும்போதே ஆகும். அப்பொழுதே அவர்கள் அவரிடமிருந்து முழு ஆஸ்தியையும் பெறுவார்கள்.

2) மனித ஆத்மாக்கள் அனைவரும் மறுபிறவி எடுக்கிறார்கள்.

பாருங்கள், மதத்தை ஸ்தாபனை செய்ய வரும் அனைவரும் மறுபிறவி எடுத்து தங்கள் தர்மத்தைப் பராமரிக்க வருகிறார்கள். அவர்கள் தாங்களும் விடுதலை அடையவில்லை, ஏனையோரையும் அவர்கள் விடுவிப்பதில்லை. அவர்கள் தொடர்ந்தும் அனைவரையும் விடுவிப்பார்களாயின், விடுதலை செய்யப்படாதவர்கள் மாத்திரமே இப் பூமியில் எஞ்சி இருப்பார்கள். எவ்வாறாயினும் பாவாத்மாக்கள் எஞ்சி இருப்பார்கள் என்றும் புண்ணிய ஆத்மாக்ள் சென்று விடுவார்கள் என்றில்லை. உதாரணமாக சந்நியாசிகள் விகாரமற்றவர்கள். அவர்கள் விடுதலை அடைந்தால் பாவாத்மாக்கள் மாத்திரமே எஞ்சி இருப்பார்கள். பின்னர் உங்களால் சந்நியாசிகளின் விரிவாக்கத்தைப் பார்க்க முடியாது. உலகமும் அவ்விதமாகத் தொடரமுடியாது. புண்ணியாத்மாக்கள் தங்களது விகாரமற்ற சக்தியினால் உலகிற்கு ஆதாரமாக இருக்கிறார்கள். இதனாலேயே உலகம் தொடர்கிறது. இல்லையேல் உலகம் காமத்தீயினால் எரிந்திருக்கும். எந்தவொரு ஆத்மாவினாலும் சக்கரத்தின் மத்தியில் விலகி முக்தியை அடையமுடியாது..அது நியதி அல்ல.அதே போன்று ஒரு இலையேனும் விதைக்:குள் அமிந்துவிட முடியாது. ஒரு விருட்சம் வளர்ந்து முற்றிலும் உக்கிய நிலையை அடைய வேண்டும். பின்னர் புதிய விருட்சம் வெளி வரும். எனவே ஒரு சமயத்தை ஸ்தாபிக்க வரும் அனைவரும் நிச்சயமாக அதைப் பராமரிப்பார்கள். ஆனால் நாங்கள் ஆதாரத்தை எடுக்கும் ஒரேயொருவர் எண்ணற்ற சமயங்களை அழிக்கும் போதே அந்த ஒரேயொரு தர்மம் ஸ்தாபிக்கப்படும். இந்த ஒரேயொருவர் ஸ்தாபனை ,விநாசம், பராமரிப்பு ஆகிய மூன்றையும் செய்கிறார். ஆனால் சமயத் தந்தைமார் சமய ஸ்தாபனையை மாத்திரமே செய்கிறார்கள். அவர்கள் விநாசத்தைச் செய்வதில்லை. விநாசத்தின் பணியைத் தூண்டுவது கடவுளின் கரங்களிலேயே உள்ளது. இதனாலேயே அவர் திரிமூர்த்தி என அழைக்கப்டுகிறாh. அச்சா

----ஓம் சாந்தி----